ஈரோட்டில் காவிரியைக் கடக்கவும், திருப்புவனத்தில் வைகையைக் கடக்கவும், ஆற்காடு–திண்டிவனம் சாலையில் சேயாற்றைக் கடக்கவும், ஆற்காடு–வந்தவாசி சாலையில் கமந்தலநாக நதியைக் கடக்கவும் பெரிய பாலங்கள் கட்ட நிதி ஒதுக்கியுள்ளது. புதுப் பாதைகள் வேலை களுக்காக ஜில்லா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துப் போர்டு களுக்கும் மான்யம் வழங்க 33 லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. தூசியற்ற தளம் அமைக்க முனிசிபாலிட்டி களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் மான்யமாக 12 லட்ச ரூபாயும் கடனுக 8 லட்ச ரூபாயும் தர வசதி செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மலையில் இயற்கைக் காட்சி இடங்களுக்குச் செல்லும் பாதைகளைச் செம்மைப்படுத்த நீலகிரி ஜில்லா போர்டுக்கு விசேஷ மான்யமாக 2 லட்ச ரூபாய் அளிக்கப்படும்.

மருத்துவம், சுகாதாரம்.

19. மருத்துவ வசதிகளைப் பொருத்தவரை 13 லட்ச ரூபாய் செலவில் செங்கற்பட்டு, கடலூர், பாளையங்கோட்டை, வேலூர், உதகமண்டலம், தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் உள்ள மாவட்ட தலைமை ஆஸ்பத்திரிகளுக்கு அபிவிருத்திகள் செய்யப் படும். சேயாறு, விருத்தாசலம், ஸ்ரீபெரும்புதூர், பவானி, திருப்பத்தூர், அரந்தாங்கி, ஸ்ரீவைகுண்டம், ஜெயங்கொண் டான், ஒசூர் ஆகிய இடங்களில் ஊராட்சி மன்றங்களால் இப்பொழுது நடத்தப்படும் மருந்து சாலைகள் அரசாங்க நிர் வாகத்தின்கீழ் கொண்டுவரப்படும். பல்வேறு தாலுக்காத் தலைமை நிலைய ஆஸ்பத்திரிகளை விரிவாக்குவதற்கு 11 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்ட காலத் திற்குள் 80 பிரதம ஆரோக்கிய நிலையங்கள் திறக்கத் திட்ட மிட்டுள்ளோம். அவற்றில் 52 நிலையங்களை ஏற்கனவே திறந்து விட்டோம். இன்னும் 9 புது நிலையங்கள் வரும் ஆண்டில் திறக்கப்படும். கிராமங்களிலுள்ள இந்த நிலையங்களுக்குச் செல்வதற்குத் தூண்டுகோலாக டாக்டர்களுக்கு ஒரு விசேஷப் படி தர முடிவு செய்துள்ளோம். அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரவும் ஏற்பாடு செய்து வருகிறோம். சென்னை நகரத்திலும், மதுரையிலும் மருத்துவக் கல்விப் பயிற்சி நடக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு 57 லட்ச ரூபாயில் அபிவிருத்திகள் செய்யப்படும். பொது சுகாதாரத்தைப் பொறுத்தவரை யில் நகரக் குடிநீர் வசதிக்காக இப்பொழுது நடந்துவரும் திட்டங்களை முடிப்பதற்காக 86 லட்ச ரூபாயும் கிராமக் குடிநீர் வசதிக்காக 60 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. 105 தாய் சேய் நல நிலையங்களைத் திறக்கவும் 900 தாய்களுக்கு பயிற்சி அளிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி.

20. கல்வித்துறையில் 1956-57-ம் ஆண்டில் 10 கோடியே 60 லட்ச ரூபாய் செலவு செய்தோம். நடப்பு ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு 11 கோடியே 47 லட்ச மாகும். ராஜ்ய சீரமைப்பின் காரணமாக ராஜ்யத்தின் நிலப் பரப்பும் மக்கள் எண்ணிக்கையும் குறைந்தபோதும் நாம்

கல்விக்காக இந்த ஆண்டில் செலவு செய்யும் தொகை ஏறக் குறைய 1 கோடி உயர்ந்துள்ளது. வரும் ஆண்டில் நாம் 12 கோடியே 4 லட்ச ரூபாய் செலவு செய்யத் தொகை ஒதுக்கியுள்ளோம். வழக்கம்போல் இந்த மொத்தச் செலவில் பாதிக்குமேல் ஆரம்பக் கல்விக்கே செலவாகும். ஆரம்பக் கல்விக்காக 1956-57-ல் 4 கோடியே 91 லட்ச ரூபாய் செல வாயிற்று. 1957-58-ல் செலவு 6 கோடியே 54 லட்சம் ரூபாய். வரும் ஆண்டில் 6 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவாகும். கல்விப் பிரச்னைகளை ஆராய்ந்த சென்னை சட்ட சபைக் குழு சிபார்சு செய்ததற்கு இணங்க ஆரம்பப்பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க 20 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆரம்பப்பள்ளியில் புதிதாகச் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 1 லட்சம் வீதம் பெருகி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,700 புது வகுப்புகள் தொடங்க வசதி செய்யும் வகையில் பள்ளிக்கூடங்கள் விரிவாக்கப்பட்டு அத்துடன் புதிய பள்ளிகளும் திறக்கப்படுகின்றன. புதுத் திட்டங்களுக்கான இச்செலவில் மத்திய அரசாங்கமும் பங்கு கொள்கின்றது. இச்செலவைப் பகிர்ந்துகொள்ளும் முறையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து 1956-57-ம் ஆண்டில் நமக்கு 32 லட்ச ரூபாய் கிடைத்தது. இந்த ஆண்டில் 1 கோடியே 19 லட்ச ரூபாய் கிடைக்குமென்றும் வரும் ஆண்டில் இது 1 கோடியே 35 லட்சமாக உயருமென்றும் நாம் எதிர்பார்க் கின்றோம்.

தொழிற் கல்வி.

21. தொழிற் கல்வி வளர்ச்சியில் விசேஷ கவனம் தொடர்ந்து செலுத்தி வருகின்றோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் நம் ராஜ்யத்தின் பொறியியற் கல்லூரியில் 647 மாணவர்கள் சேர்க்கவும் பல்தொழிற் பயிற்சிக் கழகங்களில் 1,142 மாணவர்களைச் சேர்க்கவும் வசதி இருந்தது. இப்பொழுது அவற்றை விரிவாக்கிப் பொறியியற் கல்லூரிகளில் 1,132 மாணவரைச் சேர்க்கவும் பல்தொழில் பயிற்சிக் கழகங்களில் 1,752 மாணவரைச் சேர்க்கவும் வசதிகள் செய்துள்ளோம். தொழிற் கல்வி நிர்வாக இலாகா ஒன்றை நாம் அமைத்துள்ளோம். ராஜ்ய தொழிற் கல்வி பயிற்சிக் குழு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இந்த அமைப்புகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டன. தொழிற் கல்வி நிலையங்களின் நிர்வாகத்தைப்பற்றியும் ஆசிரியர்கள் அமர்த்து வது பற்றியும் உள்ள பல்வேறு பிரச்னைகளைச் சமாளிக்க இந்த அமைப்புகள் உதவும் என்று எதிர்பார்க்கலாம். தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததான தொழில் நுட்ப நிபுணர் களைப் போதிய அளவில் தொடர்ந்து தயார் செய்வதிலும் இந்த அமைப்புகள் உதவும். தென்னிந்தியாவிற்கான உயர் தொழிற் கல்வி நிலையத்தைச் சென்னையில் அமைப்பது குறித்து நாம் மத்திய அரசாங்கத்துடன் நடத்திவந்த பேச்சு